## அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை–6

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத்தேர்வு ஆகஸ்ட் 2021
## தேர்வு முடிவுகளை மதிப்பெண் பட்டியலாக பதிவிறக்கம் செய்து கொள்ளுதல்,விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறைகள்

## செய்திக்குறிப்பு

நடைபெற்ற ஆகஸ்ட் 2021, மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத் தேர்வெழுதிய தேர்வர்கள் தேர்வு முடிவினை, மதிப்பெண் பட்டியலாக (Statement Of Marks) **13.09.2021 (திங்கள்கிழமை) காலை 11.00** மணி முதல் இணையதளத்திலிருந்து தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதியை (Date of Birth) பதிவு செய்து ஆன்லைனில் பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.

மேலும், அரசாணை(நிலை) எண்.129, பள்ளிக் கல்வித்(அ.தே.) துறை, நாள்.23.08.2021–இன்படி, மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்விற்கு விண்ணப்பித்த மாற்றுத் திறனாளித் தனித்தேர்வர்களுக்கு தேர்ச்சிக்கான மதிப்பெண்கள் கணக்கிடப்பட்டு தேர்வு முடிவுகள் வழங்கப்பட்டுள்ளது, எனவே மாற்றுத் திறனாளித் தனித்தேர்வர்களும் மேற்குறிப்பிட்ட வழிமுறையில் மதிப்பெண் பட்டியலை பதிவிறக்கம் செய்து, தங்களது தேர்வு முடிவினை அறிந்து கொள்ளலாம்.

**வழிமுறைகள் பின்வருமாறு:**

1. தேர்வர்கள் வருகிற **13.09.2021 (திங்கள்கிழமை) காலை 11.00** மணி முதல் தமது மதிப்பெண் பட்டியலை www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரியிலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

2. மேற்படி இணையதள முகவரிக்குள் Login செய்தவுடன் Result தோன்றும். அதில்
   **"HSE Second Year Supplementary Exam, Aug 2021 - Result - Statement Of Marks Download"**
   என்ற வாசகத்தினை "Click" செய்தால் தோன்றும் பக்கத்தில் தேர்வர்கள் தங்களது தேர்வெண் (Roll No.) மற்றும் பிறந்த தேதி (Date of Birth) ஆகிய விவரங்களை பதிவு செய்து, தங்களது மதிப்பெண் பட்டியலினை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என அறிவிக்கப்படுகிறது.

**விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்கும் முறை:**

ஆகஸ்ட் 2021, மேல்நிலை துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தேர்வர்கள் உரிய முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு **15.09.2021 (புதன்கிழமை) மற்றும் 16.09.2021 (வியாழக்கிழமை)** ஆகிய இரண்டு நாட்களில் நேரில் சென்று உரிய கட்டணம் செலுத்தி பதிவு செய்து கொள்ள வேண்டும்.

...2...

<u>விடைத்தாள் நகல் **(Scan Copy of the Answer Script)** பெறுவதற்கான கட்டணம் :</u>

ஒவ்வொரு பாடத்திற்கும் – ரூ.275/–

<u>மறுகூட்டல் –**I (Re-totalling-I)** கட்டணம்:</u>

உயிரியல் பாடத்திற்கு மட்டும் – ரூ.305/–
ஏனைய பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) – ரூ.205/–

<u>**முக்கிய குறிப்பு:-**</u>

**ஆகஸ்ட் 2021, மேல்நிலை துணைத் தேர்வுக்கான விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தனித்தேர்வர்கள் சம்பந்தப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்திற்கு செல்லும்பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து செல்லவேண்டும். மேலும், போதிய சமூக இடைவெளியினை கடைபிடிக்க வேண்டும்.**

ஒம்/–
அரசுத் தேர்வுகள்இயக்குநர்

இடம் : சென்னை–600 006.
நாள் : 09 .09.2021.